டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 25.10.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 103 - Madurai | Online Edition

# பல்லுயிர் பெருக்க பாதுகாப்பை வலுப்படுத்த தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் ரூ.1.36 கோடி விடுவித்துள்ளது

புது தில்லி, அக்.24

மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசத்தின் உள்ளூர் சமூகங்களின் வணிகப் பயன்பாட்டு பலன்களை முறைப்படுத்த தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் ரூ.1.36 கோடி விடுவித்துள்ளது.

மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசத்தின் மாநில பல்லுயிர் பெருக்க வாரியங்கள் மூலம் இந்த நிதி வழங்கப்படுகிறது.

மகாராஷ்டிராவின் சதாரா மாவட்டம், பல்தான் வட்டம், சாக்கர்வாடி கிராமத்திலும், புனே மாவட்டம், ஹவேலி வட்டம், குஞ்சிர்வாடி கிராமத்திலும், உத்தரப் பிரதேச மாநிலம் இட்டா மாவட்டம், காஸ்கஞ்சிலும் உள்ள பல்லுயிர் பெருக்க நிர்வாகக் குழுக்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.45.50 லட்சம் வழங்கப்படும். சமபங்கு, நீடித்த தன்மை, பாதுகாப்பு என்ற கோட்பாடுகளில் அரசின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை இந்த செயல்பாடு எடுத்துக்காட்டுகிறது.

இந்தியாவின் வளமான உயிரியல் பாரம்பரியத்தின் முக்கியமான பாதுகாப்பாளர் என்ற முறையில் உள்ளூர் சமூகங்களை அங்கீகரித்தல் மற்றும் உதவி செய்தல் என்பதில் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் செயல்பாட்டை எடுத்துரைப்பதாக இந்த நிதி விடுவிப்பு உத்தி அமைந்துள்ளது. உள்ளூர் நிலையில் பயன்களை அதிகரிப்பதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய நிர்வாகம் என்ற இந்தியாவின் மாதிரியை தேசியப் பல்லுயிர் பெருக்க ஆணையம் வலுப்படுத்துகிறது.

# சம்பா பயிர்களுக்கு காப்பீடு செய்திட வேளாண்மைத்துறை அழைப்பு

இராமநாதபுரம், அக்.24

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டார விவசாயிகளே பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சம்பா பயிர்களுக்கு காப்பீடு செய்திட வேளாண்மைத்துறை அழைப்பு விடுத்துள்ளது.

Ramanathapuram District Agriculture crops
Pradhan Mantri Fasal Bima Yojana Special Season& Rabi 2025-26

Ramanathapuram - I SBI - General Insurance (182 -IUs for Paddy )
Ramanathapurm -II Bajaj Allianz GIC(194 -IUs for Paddy )

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 8 |
|---|---|---|---|---|---|---|
| Sl. No | Crop | Sum Insured (Acre) | Sum Insured (Ha) | Farmer's Premium (%) | Farmer's Premium (Acre) Rs. | Cut of Date |
| 1 | Paddy -II | 25825.91 | 63790 | 1.5% | 387.39 | 15.11.2025 |
| 2 | Maize III | 22200.00 | 54834 | 1.5% | 333 | 30.11.2025 |
| 3 | Cholam | 7755.06 | 19155 | 1.5% | 116.33 | 16.12.2025 |
| 4 | Cumbu | 9300.00 | 22971 | 1.5% | 139.5 | 30.11.2025 |
| 5 | Black Gram | 12102.83 | 29894 | 1.5% | 181.54 | 15.11.2025 |
| 6 | Cotton III | 4909.72 | 12127 | 5.0% | 245.49 | 31.01.2026 |
| 7 | Sunflower | 9350.20 | 23095 | 1.5% | 140.25 | 30.12.2025 |
| 8 | Groundnut | 24300.00 | 60021 | 1.5% | 364.5 | 30.12.2025 |

H:\2025-26\DLMC\PMFBY-Rabi-2025-26-Premium & Cut off Dates

நடப்பு 2025-26 ஆம் ஆண்டு ராபி பருவத்தில் பயிர் காப்பீடு திட்டத்தில், வருவாய் கிராம அளவில் சம்பா நெல் பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம். எதிர்பாராத இயற்கை இடர்பாடுகள் மூலம் ஏற்படும் நெற்பயிர் சேதங்களின் இழப்பி லிருந்து பாதுகாத்துக் கொள்ள ராபி பருவ பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், நெல் (சம்பா பருவம்) பயிருக்கு ஒரு ஏக்கருக்கு பிரீமியமாக ரூ.387.39/- பிரீமியம் செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம்.

இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய, 1) முன்மொழிவு விண்ணப்பம், 2) பதிவு விண்ணப்பம், 3) கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், 4) வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், 5) ஆதார் அட்டை நகல் ஆகிய ஆவணங்களுடன், அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளைகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்களை (CSC) அணுகலாம்.

விவசாயிகள் சம்பா நெல் பருவ பயிர் காப்பீடு செய்ய நிர்ணயிக் கப்பட்ட காலக்கெடுவான இந்த மாதம் (நவம்பர்) 15-ந் தேதிக்குள் காப்பீடு செய்ய வேண்டும். அறிவிக்கை செய்யப்பட்ட சம்பா பயிர் களை காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி வரை காத்திருக்காமல் முன்னதாகவே காப்பீடு செய்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இது தொடர்பான விபரங்களுக்கு, ஒருங் கிணைந்த வேளாண் விரிவாக்க அலுவலகத்தை அணுகி பயனடையுமாறு திருப்புல்லாணி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் கேட்டுக்கொண்டார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# ஒருங்கிணைந்த பண்ணையில் நன்னீர் மீன்வளர்ப்பு வெளிவளாகப் பயிற்சி



கடலூர், அக்.24

வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் கடலூர் மாவட்ட மீன்வளத் துறையின் கீழ் இயங்கும் லால்பேட்டை அரசு மீன் விதை உற்பத்திப் பண்ணையில் 24.10.25 அன்று பண்ணை குட்டை அமைப்பது, ஒருங்கிணைந்த பண்ணையத்தில் நெல், மீன், ஆடு, மாடு, கோழி, வாத்து, அசோலா, காய்கறி, தோட்டம், தீவனப்புல், காளான், தேனி, மண்புழு வளர்ப்பு, சுருள்பாசி வளர்ப்பு பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மத்திய உவர்நீர் வளர்ப்பு கழகம், சாந்தோம், சென்னையில் அறிமுகம் செய்துள்ள நன்னீரில் வளரும் பால் கெண்டை மீன் இனம் பற்றிய அறிமுகமும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. நடராஜனால் வழங்கப்பட்டது. சிக்கனமாக நீரை பயன்படுத்தி, புரதச்சத்து மிகுந்த அசோலா தீவனத்தை எளிதில் வயல் மண், மாட்டுசாணம் பயன்படுத்தி சிறிய குட்டைகளில் வளர்த்து சத்தான மீன் குஞ்சுகளை வளர்ப்பது பற்றியும் தெளிவாக கூறப் பட்டது. விரால் மீன் குஞ்சுகள் வளர்ப்பு பற்றி மீன் வளத்துறை ஆய்வாளர் சதுருதீன் தெளிவாகக் கூறினார்.

புல் கெண்டை, கெண்டை, ரோகு, கட்லா, மிர்கால் இன மீன்களுக்கு பாசிகளின் மகத்துவமும், அசோலா வளர்ப்பு முறையும், சுருள்பாசி இணை உணவு பற்றியும் முனைவர் கு.காயத்ரி, உதவி பேராசிரியரால் விளக்கவுரையும் செயல் விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற விவ சாயிகள், மீன் வளர்க்கும் தொட்டிகளையும், குட்டைகளையும், தீவனம் அளிக்கும் முறையினையும் பார்வை யிட்டு கண்டுணர்ந்து பயன் அடைந்தனர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# பனை விதைகள் நடவு பணி தீவிரம்



சேலம், அக்.24

தமிழக அரசின் உத்திரவின்படி வேளாண்மைத் துறை சார்பில் சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரத்தில் தமிழ்நாடு பசுமை இயக்கம் சார்பில் அனைத்து கிராமங்களிலும் பனை விதை நடவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பனை விதை நடவுப்பணியை வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி இராஜபாளையம் கிராமத்தில் தொடங்கி வைத்து விவசாயிகளிடம் பேசும் போது மண் அரிப்பைத் தடுப்பதிலும், நிலத்தடி நீராதாரத்தைப் பாதுகாப்பதிலும் சிறந்த இடம் பிடிப்பதுடன், அடி முதல் நுனி வரை மனிதர்களுக்கு பயன்படக்கூடியதாக உள்ள கற்பக தருவான பனை மரங்கள் செங்கல் சூளைகளில் எரிபொருளாக்கப்பட்டு வருவதால் அதன் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. எனவே மாநில மரமான பனை மரம் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் அரசு பல திட்டங்களை வகுத்து வருகிறது என்றும் பனை மரங்களை நடவு செய்து நன்கு பராரிக்க வேண்டும் என்றும் கேட்டுகொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் த.நிவேதா ஸ்ரீ, உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆ.குமார், சி.தனபால், அட்மா திட்ட பணியாளர்கள் சி.சரஸ்வதி, தீபன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

24.10.2025 வெள்ளிக்கிழமை

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# இப்கோ நானோ காப்பர்

## தாவர ஆரோக்கியத்திற்கான நவீன தீர்வு!




சென்னை, அக்.24

நானோ காப்பர் என்பது நவீன நானோ தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தாவர ஊட்டச்சத்து ஆகும். இது தாவர வளர்ச்சிக்கும், நோய் எதிர்ப்புத் திறனுக்கும், விளைச்சல் மேம்பாட்டிற்கும் மிகுந்த ஆதாரமாக இருக்கிறது. நானோ காப்பர் தாவர அமைப்பு மற்றும் குளோரோபில் உற் பத்தியில் உதவுகிறது. இதனால் தாவரங்கள் ஆரோக்கிய மாக வளர்ந்து, ஒளிச்சேர்க்கை சிறப்பாக நடைபெறுகிறது. மேலும், இலைகள் பழுப்படையாமல் பயிரின் வளர்ச்சியை அதிகரித்து விதை உருவாகுவதையும் உறுதி செய்கிறது.

மேலும் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் தன்மை கொண்டது. இதனால் தாவரங்கள் பல்வேறு பூஞ்சை மற்றும் வைரஸ் நோய்களிலிருந்து தப்பித்து ஆரோக்கியமாக வளர்கின்றன. அதேபோல், ஊட்டச்சத்து உறிஞ்சுதலை அதிகரிக்கும் திறன் வாய்ந்தது. இதன் மூலம் தாவர வேர் மற்றும் இலைகள் ஊட்டச்சத்தை சிறப்பாக உறிஞ்சுவதால், முழு தாவர வளர்ச்சி மேம்படுகிறது. நானோ காப்பர் பயன்படுத்தும் முறையும் எளிமையானது.

**பயன்படுத்தும் அளவு** : ஒரு லிட்டர் நீருக்கு 1 மிலி வீதம், ஏக்கருக்கு 1000 மிலி. இதனை இலை வழியாகவோ, சொட்டு நீர்ப் பாசனம் மூலமோ பயன்படுத்தலாம். மேலும், தொழில்நுட்ப முன்னேற்றத்துடன், ட்ரோன் தெளிப்பு முறையிலும் நானோ காப்பர் பயன்படுத்தலாம். 10 லிட்டர் டேங்கிற்கு 100 மிலி நானோ காப்பர் இலைவழி தெளிக்கலாம். இதன் மூலம் விரைவாகவும், சமமாகவும் தெளித்து சிறந்த பயிர் ஆரோக்கியத்தைப் பெறலாம்.

நானோ காப்பர் – தாவர ஆரோக்கியத்தை பாதுகாக்கும் சக்தி! இது பயிர்களின் வளர்ச்சி, விளைச்சல் மற்றும் தரத்தை மேம்படுத்தி, விவசாயியின் நம்பகமான இப்கோ திகழ்கிறது.

இப்கோ நானோ காப்பர் – நவீன விவசாயத்தின் நம்பிக்கையான தோழன்!

# வடகிழக்கு பருவ மழைக் காலத்தில் கவனிக்க வேண்டியவைகள்

வடகிழக்கு பருவ மழை தமிழகத்தில் துவங்கி அனேக மாவட்டங்களில் இடைவிடாத மழை பெய்து வருகிறது. மழைக் காலத்தில் கடலூர் மாவட்ட விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் பற்றி வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆலோசனைகளை பின்வருமாறு கொடுத்துள்ளார்கள்.




## தண்ணீர் தேங்கியுள்ள நெற்பயிரில் மேலாண்மை குறிப்புகள்

கடலூர் மாவட்டத்தில் பெய்துவரும் கனமழையினால் நெற் பயிரானது தண்ணீரில் மூழ்க வாய்ப்புள்ளது. இதனால் பயிர்கள் சாய்ந்து பாதிப்புக்குள்ளாகும். மேலும் தொடர் மழையினால் வயல் களில் நீர் தேங்கி சம்பா பயிர்கள் மூழ்கி பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

பயிர் நிலத்தில் அதிக நாள் நீர் தேங்கி இருந்தால் மண்ணில் காற்றோட்டம் மற்றும் நுண்ணியிர்களின் செயல்பாடு பாதிக்கப்படும். இதனால் பயிர்கள் மண்ணில் உள்ள முக்கிய சத்துக்களான தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்துகளை எடுத்து கொள்ள முடியாமல், சத்து பற்றாக்குறையினால் பயிர்கள் பாதிக்க வாய்ப்பு உள்ளது. மேலும் மண்ணில் உள்ள முக்கிய சத்துக்கள் மழை நீரில் அடித்து செல்லவும் வாய்ப்புள்ளது. இதனால் பயிர்களுக்கு சரியான சத்துக்கள் கிடைக்காமல், குறிப்பாக தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள், இரும்பு, தாமிரம் மற்றும் மாங்கனீசு சத்து குறைந்து இலைகளின் விகிதாச்சாரம் பாதிக்கப் படுவதால் இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

இதனை நிவர்த்தி செய்ய தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் நல்ல வடிகால் வசதியினை ஏற்படுத்தி வயலில் அதிகமாக உள்ள தண்ணீரை வடிய வைக்க வேண்டும். முதிர்வடையாத பயிர்களில் ஒரு ஏக்கர் நிலத்தில் மேலுரமாக 22 கிலோ யூரியாவுடன் நான்கு கிலோ வேப்பம் புண்ணாக்கு, 18 கிலோ ஜிப்சம் மற்றும் 17 கிலோ பொட்டாஷ் இட வேண்டும்.

மண்ணில் தொடர்ந்து மழைநீர் தேங்கியிருப்பதினால், நுண்ணூட் டச்சத்து குறைபாடு ஏற்படுவதை தவிர்க்க ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீருடன் 2 கிலோ யூரியா, ஒரு கிலோ சிங்க் சல்பேட், 150 கிராம் காப்பர் சல்பேட் மற்றும் 100 கிராம் போராக்ஸ் கலந்து இலைவழியாக தெளிக்க வேண்டும்.

இரட்டை நடவு செய்வதன் மூலம் இடைவெளியை நிரப்பலாம். அதாவது நடவு செய்த 25 -30 நாள் பயிரின் தூர்களை தனியாக பிரித்து ஒரு குத்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் நடுவதன் மூலம் நாற்றுக்களின் தேவையை 5 - 7 மடங்காக பூர்த்தி செய்யலாம்.

பேசிலஸ் சப்டிலிஸ் ஏக்கருக்கு ஒரு கிலோ அளிப்பதன் மூலம் நெல் பயிரில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

நெற்பயிர் முழுவதுமாக அழிந்து விட்ட சூழ்நிலையில் குறுகிய கால இரகத்தினை கொண்டு நேரடி நெல் விதைப்பினை மேற் கொள்ளலாம். நாற்றுவிட்டு நடும் முறையில் சமுதாய நாற்றாங் காலை உற்பத்தி செய்து, நெல் நாற்று நடும் கருவியை கொண்டு

நடவு செய்வதன் மூலம் நேரத்தையும், பண விரயத்தையும் தவிர்க்கலாம்.

மழைக்கால நெற்பயிரில் பாக்டீரியா இலை கருகல் நோய் வராமல் தடுக்க காப்பர் ஹைட்ராக்சைடு 2 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். வெப்பம் குறையும் பொழுது இலை சுருட்டு புழு தாக்குதல் அதிகம் வர வாய்ப்புள்ளது. இதை தடுக்க குளோரான்டிரனிலிப்ரோல் என்ற மருந்தை ஏக்கருக்கு 60 மிலி 100 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**மழைக்காலத்தில் வாழை சாகுபடி மேலாண்மை**

வாழைக்கும் சரியான வடிகால் வசதி செய்து தரவேண்டும். தண்ணீர் அதிக நாள் தேங்காதவாறு வடிகால் வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும். மழை முடிந்தவுடன், தண்ணீரை வடித்தவுடன், வாழைக்கு களைக்கொத்து மூலம் மண்ணை களரிவிட வேண்டும். அப்பொழுது தான் மண்ணில் காற்றோட்டம் மற்றும் நுண்ணியிர் களின் செயல்பாடுகள் நன்றாக இருக்கும். மழைக்காலத்தில் வாழை மரம் சாயாமல் இருக்க வலுவான குச்சிகள் (அ) கயிறுகளை கொண்டு வாழை சாயாதவாறு முட்டு கொடுத்து கட்ட வேண்டும். மழைக்காலத்தில் நோய் வர வாய்ப்பு உள்ளதால் வரும்முன் காப்போம் விதிபடி வாழையில் பேசிலஸ் சப்டிலிஸ் (அ) பரிந்துரையின் படி பூசானகொல்லி மருந்துகளான காப்பர் ஆக்ஸி குளோரைடு மூன்று கிராம் ஒரு லிட்டர் நீரில் (அ) மேங்கோசெப் 2.5 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து வாழைக்கு தெளிக்க வேண்டும்.

**மரவள்ளி கிழங்கு மேலாண்மை தொழில்நுட்பங்கள்**

மரவள்ளி பயிர் சாகுபடி நிலத்தில் நல்ல வடிவாகல் வசதி அமைத் திருக்க வேண்டும். மரவள்ளியில் தொடர்ந்து மழைநீர் தேங்கினால் கிழங்கு அழுகல் மற்றும் சத்து பற்றாக்குறை தொடர்பான பிரச் சனைகள் வரும். மழைக்காலத்தில் தண்ணீர் அதிகம் தேங்கினால் மரவள்ளியில் கிழங்கு அழுகல் நோய் வராமல் தடுக்க பேசிலஸ் சப்டிலிஸ் உயிரியல் கொல்லி ஒரு கிலோ தொழுஉரத்துடன் கலந்து மண்ணில் போட வேண்டும். பாதிக்கப்பட்ட இடங்கில் மேலும் கிழங்கு அழுகல் நோய் பரவாமல் தடுக்க கார்பன்டசிம் ஒரு கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து நீர் அதிக தேங்கி பகுதியில் ஊற்ற வேண்டும்.

கரும்பு பயிரில் அதிக அளவு நீர் தேங்கி இருந்தால், மழை முடிந்தவுடன் நீரை வடிகால் வசதியுடன் வடித்து விட வேண்டும். பின்பு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கரும்பு பூஸ்டரை இலை வழியாக தெளித்து, கரும்புக்கு ஊட்டச்சத்தை உடனடியாக கொடுக்க வேண்டும்.

தென்னை மரத்தில் மழை நின்றவுடன், மழைநீரை வடித்துவிட்டு, தென்னை மரத்தில் நோய் பரவாமல் இருக்க காப்பர் ஆக்ஸி குளோரைடு 3 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தென்னை மரத்தை சுற்றி ஊற்ற வேண்டும்.

உளுந்து விதைத்த நிலத்தில் கண்டிப்பாக அதிக நாள் மழைநீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பேசிலஸ் சப்டிலிஸ் உயிரியல் பூசன கொல்லி ஒரு கிலோ மற்றும் ட்ரைகோடெர்மா விரிடி ஒரு கிலோ இரண்டையும் தொழுஉரத்தில் கலந்து மண்ணில் போட வேண்டும். விதைக்காமல் இருப்பவர்கள் உளுந்து விதையை உயிரியல் பூசன கொல்லியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

காய்கறி பயிர்களுக்கு நல்ல வடிகால் வசதி மழைக்காலத்தில் தேவை. நீர் தேங்காமல் காய்கறி தோட்டத்தை பார்த்துக்கொள்ள வேண்டும். பார் அமைத்து காய்கறி பயிர்களை நடவு செய்தால் எளிதாக மழை நீரை வடித்து விடலாம். மேலும் நோய் பரவாமல் தடுக்க பேசிலஸ் சப்டிலிஸ் (அ) காப்பர் ஆக்ஸி குளோரைடை மூன்று கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து மண்ணில் தொழு உரத் துடன் கலந்து போட வேண்டும். நாற்றாங்காலில் வடிகால் வசதி செய்யும். மேலும் காப்பர் ஆக்ஸி குளோரைடு பூசன கொல்லி மருந்து மூன்று கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து செடியின் வேர் பாகத்தில் ஊற்ற வேண்டும்.

மேலும் வெங்காய பயிரில் மழைக்காலத்தில் நோய் வராமல் தடுக்க புரோபிகோனசோல் என்ற பூசான கொல்லி மருந்து ஒரு மிலி ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

மலர்கள் பயிரில் மழைக்காலத்தில் நோய் மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்த பேசிலஸ் சப்டிலிஸ் ஒரு கிலோ தொழு உரத்துடன் கலந்து ஒரு ஏக்கர் நிலத்தில் போட வேண்டும். மேலும் மழைநீர் சாகுபடி நிலத்தில் தேங்காதவாறு நல்ல வடிகால் வசதி செய்து தரவேண்டும்.

பருத்தி வயில்களில் மழைக்காலத்தில் நோய் வராமல் தடுக்க டைபன்கோனசோல் ஒரு மிலி ஒரு லிட்டர் (அ) டெபுகோனசோல் ஒரு மிலி ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

மக்காச்சோளம் பயிர்களில் நீர் தேங்காமல் நல்ல வடிகால் வசதி செய்து தரவேண்டும். மழைநீர் நீண்ட நேரம் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

மஞ்சள் பயிரில் மழைக்காலத்தில் நோய் வராமல் அடுக்க மழை நின்றவுடன் புரோபிகோனசோல் என்ற பூசான கொல்லி மருந்து ஒரு மிலி ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் பயிருக்கு நல்ல நுண்ணூட்டச் சத்தை இலை வழியாக கொடுக்க வேண்டும்.

மேற்கூறிய முறைகளை பின்பற்றுவதின் மூலம் மழை காலத்தில் பயிரில் ஏற்படும் பாதிப்பை தடுக்க முடியும் என்று முனைவர் க.நடராஜன், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் தெரிவித்துள்ளார்.



# கால நிலை மாற்றத்தால் இடி, மின்னல் தாக்குதல் அதிகமாகிறது? ஏன்?



சமீப காலமாக இடி, மின்னல் தாக்குதல் தமிழகத்தில் வழக்கத்தை விட அதிகமாக இருக்கிறது. சில தினங்களுக்கு முன்னர் கூட கடலூர் மாவட்டத்தில் உள்ள அரிய நாச்சி கிராமத்தில் மக்காசோள வயலில் களையெடுத்து வந்த 4 பெண்கள் மின்னல் தாக்கி உயிரிழந்தனர் என்பது சோகமான நிகழ்வு.

இதுபோன்ற மின்னல் தாக்குதல் கடந்த சில ஆண்டுகளாக அதுவும் பருவ மழை காலத்தில் ஏன் நடக்கிறது என்பதை இந்த பதிவில் விரிவாக பார்ப்போம்.

**மின்னல் அதிகரிக்க காரணம் என்ன?**

குறிப்பாக பூமி வெப்பமடைவது அதிகரித்து கொண்டே வருவதால் வளிமண்டலத்தில் அதிக ஈரப்பத சூழல் உருவாகும். எடுத்துக்காட்டாக 1 டிகிரி வெப்பம் அதிகரித்தால் சுமார் 7% அதிக ஈரப்பதம் வளிமண்டலத்தில் அதிகரிக்கும். இந்த கூடுதல் ஈரப்பதம் இடி மின்னல் மழைகளுக்கு 'ராக்கெட் எரி பொருள்' போல செயல்பட வைக்கிறது. இது மேகங்களிடையே மின் மயமாக்கி 'தீவிரமான மின்னல்களை தூண்டுகிறது என சயன்ஸ் (THE SCIENCE) என்ற பத்திரிக்கையில் வெளியான ஆய்வு என்று கூறப்பட்டுள்ளது.

**இதற்கும் காலநிலை மாற்றத்திற்கும் என்ன தொடர்பு?**

காலநிலை மாற்றம் ஒரு தொடர் பிரச்சனையாகும். இது எதிர்கால பிரச்சனை அல்ல, அது இப்போதும் நடந்து கொண்டிருக்கிறது என்பது நாம் அறிந்ததே.

**இடி, மின்னல் தாக்குதலில் இருந்து தப்பிப்பது எப்படி?**

1) விவசாயிகள் பருவ மழை காலங்களில் மழை பெய்கின்ற நிலையில் அதற்கேற்ப தங்களுடைய பணிகளை அப்படியே போட்டு விட்டு அருகேயுள்ள குடிசை, பம்பு செட் போன்ற இடங்களில் தஞ்சமடைய வேண்டும்.

2) எக்காரணம் கொண்டு பசுமையான மரங்களின் அடியில் ஒதுங்கக்கூடாது.

3) இடி சத்தம் கேட்டாலே உடனே ஓடி ஒதுங்க வேண்டும். (WHEN THUNDER ROARS... GO INDOORS) என்ற மூல காரணத்தை அறிந்து செயல்பட வேண்டும்.

4) மின்னல் பாதுகாப்பு குறித்து சமூக விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.

5) இடி, மின்னல் காலங்களில் தன் தரையில் குத்து காலிட்டு உட்கார வேண்டும். தரையில் பெரு விரல் மட்டும் படிய வேண்டும்.

விவசாயிகளிடத்தில் கோடை மழையில் வருகின்ற இடி, மின்னல் தான் அதிகமாக பாதிப்பு ஏற்படுத்தும். பருவ மழை காலத்தில் பாதிப்பு இருக்காது என்ற தவறான நம்பிக்கை உள்ளது, இதை மாற்றிட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# யூரியாவுக்கு மாற்று இடுபொருட்கள் பயன்படுத்த வேளாண்மைத்துறை ஆலோசனை

சேலம், அக்.24

விளைநிலத்தில் பயிர் விளைச்சலுக்கு பெரும்பாலான விவசாயிகள் பயன்படுத்தும் யூரியாவுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதை தவிர்ப்பதற்கு மாற்று இடுபொருட்களை பயன்படுத்தி, அதிக மகசூல் பெறலாமென, விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

இது குறித்து பெத்தநாயக்கன்பாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், ஆடிப்பட்டம் உள்ளிட்ட பயிர்செய் பருவ காலத்தில், நஞ்செய் மற்றும் புஞ்செய் நிலங்களிலும் ஒட்டு மொத்த விவசாயி களும் பயிர் செய்கின்றனர். அத்தருணத்தில் பெரும்பாலான விவசாயிகள் பயிர் விளைச்சலை அதிகரிக்க யூரியா இடுபொருளை பயன்படுத்துகின்றனர். இதனால் யூரியாவுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்.

இத்தருணத்தில் நானோ யூரியா, பஞ்சகாவியா ஆகிய திரவ வடிவ மாற்று இடுபொருட்களை பயன்படுத்தி விவசாயிகள் நல்ல மகசூல் பெற முடியும்.

நானோ யூரியா என்பது திரவ வடிவத்தில் உள்ள ஒரு உயிர் நுட்ப உரமாகும். இது யூரியாவை விட மிகச் சிறிய அளவில் இருப்பதால் தாவரத்திற்கு நேரடியாகவும் வேகமாகவும் ஊட்டச் சத்து வழங்குகிறது.

நானோ யூரியாவை நெல், மக்கச்சோளம் போன்ற தானியங்களுக்கு, பயிரிடப்பட்ட 30 மற்றும் 50 நாட்களில் ஒரு முறைக்கு 1 லிட்டருக்கு 2-4 மில்லி அளவிற்கு நீரில் கரைத்து இரு முறை தெளிக்கலாம். நானோ யூரியாவை யூரியாவை விட 50 சதவீதம் குறைவாக பயன்படுத்தினாலும், சிறந்த விளைச்சல் தரும்.

பயிறு, பீன்ஸ் உள்ளிட்ட பருப்பு வகை பயிர்களுக்கு ஏக்கருக்கு 500 மில்லி அளவிற்கு 25 முதல் 30 நாட்களில் ஒரு முறையும், தோட்டக்கலைப் பயிர்களான தக்காளி, மிளகாய், பீட்ரூட், பூக்கோசு ஆகியவற்றுக்கு ஏக்கருக்கு 1 லிட்டர் வரையும், முதல் பூப்பற்றுதல் கட்டத்தில் தெளிக்கலாம்.

இதனால், பயிர்கள் வேகமாக ஊட்டச்சத்து உறிஞ்சும், ரசாயன உர செலவு குறையும். நிலத்தடி நீர் மாசுபாடு தவிர்கலாம். பூக்கும் நேரத்தில் மற்றும் வெய்யில் அல்லது மழை நேரத்தில் தெளிப்பதை தவிர்க்க வேண்டும்.

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் மாடுகளில் இருந்து கிடைக்கும் பால், தயிர், நெய், கோமியம், சாணம் ஆகிய வற்றைக் கொண்டு இயற்கையான முறையில் பஞ்சகாவியா திரவ இடுபொருளை தயாரித்து பயிர்களுக்கு தெளித்து இடுபொருள் செலவின்றி அங்கக முறையில் அதிக மகசூலை பெற முடியும். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

**PRODUCT RANGES**

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

**RITHVIK PIPES PROUDLY TRUSTED BY**

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கடலூர் விதைப்பரிசோதனை நிலையத்தில் காஞ்சிபுரம் விதைப்பரிசோதனை அலுவலர் திடீர் ஆய்வு



கடலூர், அக்.24

24.10.2025 அன்று காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை அலுவலர் பெ.ராஜகிரி, கடலூர், விதைப் பரிசோதனை நிலையத்தினை திடீர் ஆய்வு செய்தார்.

விதைப்பரிசோதனை நிலையத்தில் பராமரிக்கப்படும் அனைத்து பதிவேடுகளையும் ஆய்வு செய்தார். மேலும் விதைப் பரிசோதனை நிலையத்தில் விதை முளைப்புத்திறன் அறையை பார்வையிட்டு விதை மாதிரிகளிலிருந்து முளைப்புத்திறன் கணக்கிடும் பணி, பிறரக கலவன் பார்த்தல், புறத்தூய்மை ஆய்வு பணி ஆகியவற்றை மேற்பார்வை இட்டு அறிவுரை வழங்கினார்.

விதைப்பரிசோதனை நிலையத்திற்கு இம்மாதம் முடிய 1763 இலக்கிற்கு 2008 விதைப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சாதனை அடையப்பட்டுள்ளது.

இதுவரை விதைப்பரிசோதனை மேற்கொண்டதில் 95 விதை மாதிரிகள் தரமற்றவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையத்திற்கு வரும் விதை மாதிரிகளை சீரிய முறையில் பகுப்பாய்வு செய்து தரமான விதைகளை விவசாயிகளுக்கு கிடைக்கும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

ஆய்வின் போது வேளாண்மை அலுவலர் க.விஜயா, சே.தில்லைக்கரசி ஆகியோர் உடனிருந்தனர்.

# மண்புழு உர உற்பத்தி குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, அக்.24

மதுரை மாவட்டம் திருப்பரங் குன்றம் வட்டாரம் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 2025-26 ஆம் ஆண்டு திருப்பரங் குன்றம் வட்டாரம், பனையூர் கிராமத்தில் மண்புழு உர உற்பத்தி குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் மண்புழு உர உற்பத்தி குறித்தும் நெல், சிறு தானியங்களுக்கு மண்புழு உரம் பயன்பாட்டு முறையும் பயிரிடும் முறைகள் பற்றியும் விளக்கி கூறினார். வேளாண்மை அலுவலர் அருள் நவமணி விஜயபாரதி வேளாண்மைத்துறை மானிய திட்டங்கள் குறித்தும் உயிர் உரப் பயன்பாடு குறித்தும் கூறினார்.

மேலும் வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் கலந்து கொண்டு துறையில் வழங்கப்படும் மானியத் திட்டங்களை எடுத்துக் கூறினார். இயற்கை விஞ்ஞானி ஞானவேல் சாமுவேல் இராஜா, மண்புழு உரம் உத்திகள் கரிமக் கழிவுகள் காய்கறி உணவு இலை தலைகள் சாணம் இவற்றை ஒரு தொட்டியில் இட்டு சிவப்பு மண் புழுக்களை சேர்த்து சரியான ஈரப்பதம் மற்றும் வெப்பநிலை பராமரிக்க வேண்டும் மற்றும் மண் புழுக்கள் இந்த கழிவுகளை செறித்து ஊட்டச் சத்து நிறைந்த எச்சங்களை வெளியேற்றும் எச்சங்களை மண்புழுவு ஆகும். 45 நாட்களில் இருந்து 60 நாட்கள் தயாராகி விடும். இதற்கு துளைகள் உள்ள தொட்டி அல்லது மண்புழு உர படுக்கை பயன்படுத்தி தயாரிக்கலாம். அடிப்படையாக காய்ந்த சாணம் போன்ற வற்றை பயன்படுத்தலாம். மண்புழு உரமானது தழைச்சத்து மணிச் சத்து சாம்பல் சத்து மற்ற நுண்ணுட்டசத்துகள் நிறைந்தது. மேலும் ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் ரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் குறித்த செயல் விளக்கத்துடன் பயிற்சி அளித்தார். பல தானிய திட்டங்கள் பயிர்களுக்கான உரப் பயன்பாடு பசுந்தாள் உயிர் உரப் பயன்பாடு ஒருங்கிணைந்த விவசாயம் குறித்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி ஏற்பாடு செய்திருந்தார்கள்.

# மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டி விவசாயிகள் பங்கேற்க அழைப்பு

கிருஷ்ணகிரி, அக்.24


கிருஷ்ணகிரி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, திருந்திய நெல் சாகுபடி மூலம் அதிக விளைச்சல் பெறும் விவசாயிக்கு விருது வழங்கப்படவுள்ளது.

எனவே இப்போட்டியில் விவசாயிகள் கலந்து கொள்ளமாவட்ட வேளாண்மை இணை இயக்குந (பொ) காளிமுத்து அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை கடைப்பிடித்து, மாநிலத்திலேயே அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு, நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது, ரூ.5 லட்சம் சிறப்பு பரிசு மற்றும் ரூ.7 ஆயிரம் மதிப்புள்ள பதக்கம் ஆகியவை, தமிழ்நாடு முதலமைச்சரால் வழங்கப்படவுள்ளது. இந்த பயிர் விளைச்சல் போட்டியில் பங்கு பெறும் விவசாயிகளின் வயல்கள் நடுவர்களின் முன்னிலையில் சொந்தமாகவோ அல்லது குத்தகையாகவோ இருக்கலாம். குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிடுபவராக இருக்க வேண்டும். மேலும், அரசால் அங்கீகரித்து அறிவிக்கை செய்யப்பட்ட நெல் ரகங்கள் மட்டுமே பயிர் செய்திருக்க வேண்டும். 1 ஏக்கர் நிலத்தில் அறுவடை மேற்கொள்ள வேண்டும்.

எனவே, திருந்திய நெல் சாகுபடி செய்து, பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், உடனடியாக அந்தந்த வட்டாரங்களில் உள்ள, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலத்தை அணுகி, விண்ணப்பம் பெற்று, மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ள திரும்ப பெற முடியாத பதிவு கட்டணமாக ரூ.150 செலுத்தி விண்ணப் பிக்கலாம். எனவே, இந்த வாய்ப்பை கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மக்காச்சோளப் படைப்புழு தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

விருதுநகர், அக்.24

விருதுநகர் மாவட்டத்தில் தற்பொழுது பரவலாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. விருதுநகர் மாவட்டத்தில் சுமார் 37000 ஹெக்டேர் மக்காச்சோளப் பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது சாகுபடி செய்யப்பட்டு வரும் மக்காச் சோளப் பயிரில் படைப்புழுத் தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கு, விவசாயிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

## ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள்

தமிழகத்தில் பரவலாகக் காணப்படும் மக்காச்சோளபடைப் புழுவிற்கு ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் நடைமுறையில் உள்ளது. அவையாவன :

## கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

1. கோடை உழவு செய்வதன் மூலம் படைப்புழுவின் கூட்டுப்புழு பருவங்கள் வெளிக்கொணரப்பட்டு, பறவைகளுக்கு இரையாகின்றன. கடைசி உழவின் போது, ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடவும். அவ்வாறு இடுவதால் கூட்டுப்புழுக்கள் பாதிப்பிற்கு உள்ளாகி அந்திப்பூச்சிகளாக வெளிவருவது தடுக்கப் படுகிறது.

2. ஒட்டு ரக விதைகள் பூஞ்சாண கொல்லிகளோடு ஏற்கனவே விதைநேர்த்தி செய்யப்பட்டிருந்தாலும் அல்லது செய்யப்படமால் இருந்தாலும் பிவெரியாபெசியானா பூஞ்சாணக்கொல்லி (அல்லது) தையாமீத்தாக்ஸைம் 30 FS பூச்சிக்கொல்லியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்றளவில் விதைநேர்த்தி செய்யவும். இவ்வாறு செய்வதால் விதைத்த 25 நாட்களுக்கு மக்காச்சோள பயிருக்கு ஆரம்ப நிலை பாதுகாப்பு படைப்புழுக்களிடமிருந்து கிடைக்கின்றது.

3. மக்காச்சோளத்தை நெருக்கி பயிரிடுவதால், புழுக்களும் அந்திப்பூச்சிகளும் அடுத்தடுத்த செடிகளுக்கு எளிதாக பரவி சேதம் ஏற்படுகின்றது. அதனால் 60 X 25 செ.மீ (நன்செய்) மற்றும் 45 X 25 செ.மீ (புன்செய்) ஆகிய சரியான இடைவெளி

களில் பயிர் செய்யவும். பத்து வரிசைகளுக்கு ஒரு முறை 60 செ.மீ இடைவெளிவிட்டு நடுவதால் பூக்கள் மற்றும் கதிர்பிடிக்கும் பருவங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகளை பாதிப்புக்குள்ளான இடங்களில் எளிதாக தெளிக்கலாம்.

4. வரப்பு பயிராக குறைந்த வயதுடைய தட்டைப்பயிர், சூரியகாந்தி மற்றும் எள் பயிர்களை (2-3 வரிசைகள்) வளர்ப்பதன் மூலம் நன்மை தரும் பூச்சிகளான ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் பல்கிப் பெருகுகின்றன.

5. மக்காச்சோளப் படைப்புழுக்களுக்குரிய இனக்கவர்ச்சிப் பொறி மற்றும் இனக்கவர்ச்சி குப்பி (செப்டா) ஏக்கருக்கு 20 என்றளவில் பரவலாக வைத்து மக்காச்சோளப் படைப் புழுக்களின் ஆண் அந்திப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். இவ்வாறு செய்வதால் பெண் அந்திப்பூச்சிகள் ஆண் அந்திப் பூச்சிகளுடன் இனச் சேர்க்கை செய்வது தடுக்கப்பட்டு பெண் அந்திப்பூச்சிகள் கருவுற்ற முட்டைகளையிடுவது தவிர்க்கப் படுகிறது.

6. பயிரின் 15-20 நாட்கள் வயதில் (முதல் முறை) அசிடிராக்டின் (10000 பிபிஎம்) 1% 20 மில்லி அல்லது எமாமெக்டின் பென் சோயெட் 5 எஸ்ஜி 4 கிராம் அல்லது தையோடிகார்ப் 75% நனையும் தூள் 20 கிராம் 10 லிட்டர் தண்ணீர் என்றளவில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் செடிகளின் குருத்துப் பகுதிகளில் நன்கு படுமாறு தெளிக்க வேண்டும். செடிகள் 15-20 நாட்கள் வயதில் இருக்கும் போது விசைத் தெளிப்பான் மூலம் பூச்சிக்கொல்லி தெளிக்கக் கூடாது.

7. பின்னர் பயிரின் வயது 40-45 நாட்கள் (இரண்டாம் முறை) என்ற நிலையிலிருக்கும் பொழுது ஸ்பைனிடோரம் 12 எஸ்சி 5 மில்லி அல்லது நோவலூரான் 10 இசி 15 மில்லி அல்லது மெட்டாரைசியம் அனிசோபிலியே 80 கிராம் அல்லது புபென்டி யமைட் 480 எஸ்ஸி 4 மில்லி அல்லது குளோரன் டிரனிலிபுரோல் 18.5 எஸ்ஸி 4 மில்லி 10 லிட்டர் தண்ணீர் என்றளவில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் செடிகளின் குருத்துப் பகுதிகளில் நன்குபடுமாறு தெளிக்க வேண்டும். விசைத்தெளிப்பான் மூலம் தெளிக்கும் போது மேற்குறிப்பிட்ட பூச்சிக்கொல்லிகளை 3 மடங்கு அளவில் 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

8. தேவைப்பட்டால் கதிர் பிடிக்கும் பருவதில் இரண்டாவது முறைக்கு பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளில் ஒன்றை சுழற்சி முறையில் உபயோகிக்கவும்.

மேற்கண்ட ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளை கையாண்டு மக்காச்சோளப் படைபுழுவை கட்டுப்படுத்தலாம் என விருதுநகர், வேளாண்மை இணை இயக்குநர் மு.சுமதி தெரிவித்துள்ளார்.

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

DOCTOR OF ASTROLOGY
**பா.இளங்கோவன்**
M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# நாய்களை இன்னல்படுத்தும் இதயப்புழுக்கள்

நாயினங்களில், இதயப்புழுக்கள் நோய் டைரோபிலேரியா இம்மைட்டிஸ் (Dirofilaria immitis) எனும் உருண்டைப் புழுவின் இளம் புழுக்களால் ஏற்படுகிறது. இந்நோயைப் பரப்புவதில் கொசுக்கள் பெரும் பங்காற்றுகின்றன. பல வகையான கொசு இனங்கள் இந்நோயைப் பரப்பினாலும், நம்நாட்டில், அனோஃபிலஸ், க்யூலெக்ஸ், ஏடிஸ் வகை கொசுக்களே நாயினங்களில் இதயப் புழுக்கள் தாக்கம் பரவுவதற்கு காரணமாக இருக்கின்றன.

பாதிப்புற்ற நாய்களில், இதயப் புழுக்கள், இதயம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இரத்த நாளங்களைப் பெரிதும் பாதித்து, உடல் நலக்கேடும், உயிரிழப்பும் ஏற்படுத்துகின்றன. இதயப் புழுநோய், நாய்களைப் போன்று, பூனைகளையும் தாக்கி, பாதிப்புகள் ஏற்படுத்துகின்றது. பூனைகளின் இரத்த நாளங்கள் அளவில் குறுகி இருப்பதாலும், நுரையீரல் இரத்த ஓட்டம் அருகி இருப்பதாலும் நாய்களைக் காட்டிலும் பூனைகளில் பாதிப்புகள் தீவிரமாகவும், அபாயகரமாகவும் இருக்கும். சொற்ப எண்ணிக்கை யிலான புழுக்கள் தாக்கினாலும், நுரையீரல் குமிழ் அடைப்பும், மூச்சுத்திணறலும் ஏற்பட்டு பூனைகள் உயிரிழக்கக் கூடும்.

### இதயப் புழுக்களின் வாழ்க்கை வட்டம்

இதயப் புழு நோய் சுழற்சி, பாதிப்புற்ற நாயை கொசு கடிப்பதில் இருந்து தொடங்குகிறது. கொசுக்கள், பெரும்பாலும் ரோம அடர்த்தி குறைவாக இருக்கும் நாயினங்கள் மற்றும் மென்மை யான தோல் இருக்கும் பகுதிகளையும் கடிப்பதற்கு அதிக விருப்பம் கொண்டிருப்பதால், அவ்வகை இனங்களும், பகுதிக ளும் அதிக பாதிப்பிற்குள்ளாகின்றன. தொற்று நிலைகள், ஒரு மாதத்திற்குள் கொசுவின் ஜீரண மண்டலத்தில் வளர்ந்து, உருப்பெற்று கொசுவின் உமிழ் நீர் சுரப்பிகளை வந்தடை கின்றன. இந்நிலையில், கொசுக்கள், புதிய பாதிப்பில்லாத நாய்களைக் கடிக்கும் பொழுது தொற்று நிலைகள் உடலில் நுழைந்து, இரத்த ஓட்டம் மூலம் பல்வேறு உறுப்புகளுக்குச் சென்று, பருவமடைந்து, இளம் புழுக்களை 6-7 மாதங்களில் உருவாக்கத் தொடங்குகின்றன.

முழுவளர்ச்சியடைந்த ஒரு இதயப்புழு, ஐந்து வருடங்களுக்கு மேல் நாயின் உடலில் வாழ்ந்து லட்சக்கணக்கான இளம் புழுக்களை உருவாக்கும் திறன் கொண்டுள்ளது.

## இதயப்புழு நோய் உருவாக்கம்

இளம் இதயப்புழுக்கள், இதயம் மற்றும் இதயத்திற்குச் செல்லும் முக்கிய இரத்த நாளங்களை அடைப்பதே பெரும் பாலான பாதிப்புகளுக்கு காரணமாக அமைகிறது. அதாவது இளம் இதயப் புழுக்களின் அளவு ஏறக்குறைய சிறிய இரத்த நாளங்களின் விட்டத்தை ஒத்து இருப்பதால், அவை இரத்த நாளங்களை முற்றிலும் அடைத்து விடுகின்றன. உடலின் முக்கிய உறுப்புகள் தங்கள் இயக்கத்திற்கு தேவையான சத்துக்கள் மற்றும் பிராண வாயுவை இரத்தத்தின் மூலமே பெறுகின்றன. ஆனால் அவற்றில் அடைப்பு ஏற்பட்டு, இரத்த ஓட்டம் சீராக இல்லாத போது, முக்கிய உறுப்புகளான கல்லீரல், நுரையீரல் ஆகியவற்றின் இயக்கத்தில் தொய்வு ஏற்படுகிறது.

இதயப்புழுக்களின் தாக்கம் தீவிர நிலையை அடையும் பொழுது, இதயத்தில் உள்ள வால்வுகள் சரிவர இயங்காமல், இரத்தச் சோகை மற்றும் இதய செயலிழப்பு ஏற்படுகிறது. இதன் விளைவாக, சிறுநீரகமும் பாதிப்புற்று, கால்களில் நீர் கோர்வையுடன் வீக்கமும் தோன்றும்.

## நோய் அறிகுறிகள்

இதயப்புழு நோய் அறிகுறிகளின் வெளிப்பாடு, பாதிப்புற்ற நாய்களின் வயது மற்றும் எவ்வளவு எண்ணிக்கையில் முதிர்ந்த புழுக்கள் உள்ளன என்பது பொறுத்தும் அமையும். நாய்கள் பொலிவிழந்து, சோர்ந்து போய் உறங்கிக் கொண்டே இருக்கும். மிதமான இருமல் இருக்கும். இயல்பு நிலையில், நல்ல ஓய்வில் இருப்பதைக் காட்டிலும் நடைபயிற்சியின் போதும், அதற்குப் பின்னரும் இருமல் அதிகப்படியாகவும், கடுமையாகவும் இருக்கும். மிகையான, இரைச்சலான மூச்சுவிடுதல் இருக்கும். சில தருணங்களில், இருமும் பொழுது இரத்தம் கூட வெளிப் படலாம். மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடை பெற்றால், இதயத் துடிப்பு அதிகரித்து, சில நாய்கள் களைப்புற்று மயங்கி கீழே விழக்கூடும். முக்கிய உறுப்புகள் பாதிப்படையும் பொழுது, பசியின்மை, எடையிழப்பு, வயிறு உப்பிய நிலை, மஞ்சள் காமாலை, இரத்தச்சோகை, கால் வீக்கம் போன்றவையும் காணப்படும்.

## இதயப்புழு தாக்கம் கண்டறிதல்

மேற்கண்ட அறிகுறிகளைக் கொண்டும், முழு உடல் பரிசோதனை மற்றும் ஆய்வகப் பரிசோதனை செய்தும் இதயப்புழு நோயைக் கண்டறியலாம். நலிவுற்ற நாய்களின் இரத்தப் படர்வை, நிறமூட்டி, நுண்ணோக்கியில் பார்க்கும் பொழுது, இதயப் புழுக்களைக் காணலாம். புழுக்களின் அளவுக் குறிகளைக் கொண்டும். பாலிமரேஸ் தொடர்வினை மேற் கொண்டும், இதயப்புழுக்களின் வகையைக் கண்டறியலாம்.

மீயொலி பரிசோதனையில் இதயம் மற்றும் நுரையீரலில் ஒலிச்சுவடுகள் இயல்பிலிருந்து வேறுபட்டு இருக்கும். இதயத் துடிப்பு பதிவுக் கருவியில் (ECG), மாறுபட்ட இதய ஒலிகள், இதயத் துடிப்பின் விகிதம் மற்றும் இதய அறைகளின் அளவில் மாறுபாடு இருப்பதை அறியலாம். இதய எதிரொலி வரைவு மானி (ECHO) பரிசோதனையில், இதயப்புழுக்களின் சுவடுகளைக் காணலாம். மேலும், ஊடுகதிர் பரிசோதனையில் இதயத்தில் வீக்கம் மற்றும் முக்கியமாக நுரையீரல் தமனியில் வீக்கம் காணப்படும்.

## இதயப்புழு தாக்கத்திற்கான சிகிச்சை

அறிகுறிகளுக்கேற்பவும், உறுப்புகளின் பாதிப்பிற்கேற்பவும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதயப்புழுக்களின் தாக்கத்திற் கெதிராக ஐவெர்மெக்டின், மில்பிமைசின் போன்ற மருந்துகள் கொண்டு சிகிச்சை அளிக்கப்படும். மேலும், வுல்பேக்கியா (Wolbachia) எனும் நுண்மம் இதயப் புழுக்களின் மேல் வளர்ந்து தொற்று ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதால், அதனை கட்டுப்படுத்தவும் நுண்மக் கொல்லிகள் அளிக்கப்படும். சிகிச்சைக்குப் பிந்திய சில நாட்களில், இதயப் புழுக்கள் இறக்கும். இறந்த இதயப் புழுக்கள் நுரையீரலைச் சென்றடைந்து அங்குள்ள சிறிய நாளங்களில் தேக்கமுறும். காலப்போக்கில் அவை உட்கிரகிக்கப்படும். இதற்குச் சில வாரங்கள் முதல் சில மாதங்கள் வரை ஆகலாம்.

எனினும், துரதிஷ்டவசமாக, சில வேளைகளில், இறந்த புழுக்கள் ஒன்றி ஒருங்கிணைந்து உருண்டையாகி, நுரையீரல் தமனியை முற்றிலும் அடைத்து விடும். எனவே, சிகிச்சைக்குப் பின்னரும், செல்லப் பிராணிகளில் இறந்த புழுக்கள் அடைப்பால் உடல் நலச்சீர்கேடுஏற்படுகிறதா என்பதையும் உன்னிப்போடு பார்க்க வேண்டும்.

இவற்றிற்கு எல்லாம் ஒருபடி மேலாக, செல்லப் பிராணிகளுக்கு முழு ஓய்வு அளிக்க வேண்டும். நோய் பாதிப்பில் இருந்து முற்றிலும் வெளிவந்த பின்னரே நாய்களை நடக்க வைக்கவோ அல்லது சிறிய அளவில் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகளில் ஈடுபடுத்த வேண்டும்.

## இதயப்புழு நோயைத் தடுக்கும் வழிமுறைகள்

இதயப்புழுக்களின் தாக்கத்தை இரத்தப்படர்வு பரிசோதனையில் எளிதில் கண்டறிய இயலும். ஆனால், நோயறிவுறுத்தும் அறிகுறிகள் காணப்படாத பொழுதும், ஆய்வகப் பரிசோதனை செய்யப்படாத பொழுதும் இதயப்புழு நோய் தாக்கம் கண்டறியப்படாமல் நாய்கள் உயிரிழக்கின்றன. இறந்த நாய்களில், சவப் பரிசோதனை செய்யும் பொழுது தான், தற்செயலாக, இதய அறைகள் மற்றும் இரத்த நாளங்களில் இதயப் புழுக்களைக் காண நேரிடும். எனவே, செல்லப் பிராணிகள் வளர்ப்போர், தங்கள் செல்லப் பிராணிகளின் உணவுப் பழக்கத்திலோ அல்லது பிற நடவடிக்கைகளிலோ மாற்றம் தென்பட்டால், உடனடியாக கால்நடை மருத்துவரிடம் சென்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். குறித்த கால இடைவெளிகளில் முழு உடல் பரிசோதனை செய்து குடற்புழு நீக்கம் செய்து கொள்ள வேண்டும். இவற்றுடன், தங்கள் வீடு மற்றும் நாய்களின் கொட்டிலையும் சுத்தமாகவும், சுகாதார மாகவும் பேணினாலே, கொசுக்களை ஒழித்து கொசுக்களினால் பரவும் இதயப் புழுக்களின் பாதிப்பிலிருந்து தங்கள் செல்லப் பிராணிகளைக் காக்கலாம்.

தகவல் : **முனைவர் சு.சுபப்பிரியா, இணைப் பேராசிரியர், முனைவர் இரா.பாரதி, முனைவர் த.மோகனபிரியா, உதவிப் பேராசிரியர்கள், கால்நடை நோய் குறியியல் துறை, முனைவர் சா.தியோஃபிலஸ் ஆனந்த்குமார், பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை நோய் குறியியல் துறை, முனைவர் க.அருணாச் சலம், பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை பூச்சியியல் துறை, சேலம் கால்நடை மருத்துவக் கல்லூரி, சேலம் – 636 112.**

